# ஆயர் மடல் ......

கிறிஸ்துவுக்குள் அன்பான அலைன் திருச்சபை விசுவாச குடும்பங்களுக்கு..

இந்த புதிய மாதத்தில் திரியேக தேவனின் தெய்வீக அன்பு நம்மிடையியே பெருகுவதாக. விடுமுறையை நன்றாக இந்தியாவிலே கொண்டாடி விட்டு, புத்துணர்ச்சியோடும், புதுப்பொலிவோடும் வந்திருக்கிற உங்களை வாழ்துகிறேன். உங்கள் வீடுகளை சந்திக்கவும், உங்களுடைய சூழ்நிலைகளை புரிந்து கொள்ளவும் எனக்கு உதவி செய்த ஒவ் வொருவருக்கும் நான் மனதார நன்றி சொல்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் இந்த புதிய மாதத்தில் ஒரு தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு புதிய நபரை குருவானவருக்கு அறிமுகப்படுத்துவது, ஓய்வுநாள் ஆராதனைக்கு அழைத்து வருவது. அப்பெழுது தான் இந்த ஊழியம் தழைக்கும், செழிக்கும். இதே ஆசீர்வாதத்தை உங்களுக்கு கர்த்தர் அளிப்பார். நீங்களும் உங்கள் குடும்பங்களும் செழிக்கவும், தழைக்கவும் செய்வார். நீங்கள் கர்த்தரை கனப்படுத்துங்கள், அவர் உண்மையுள்ளவராக உங்களை கனப்படுத்துவார். இது நீங்கள் தேவனுக்கு செய்ய வேண்டிய கடமை. மேலும், தேவன் உங்களுக்கு வழங்கின தாலந்துகளையும், திறமைகளையும் கண்டு கொள்ளவும், அதை தேவ நாம மகிமைக்கென்று பயன்படுத்தவும் ஜூனியர் ஸ்கூல் (Junior Church) ஊழியம், யூத் பெல்லோஷிப் (Youth Fellowship) பெண்கள் ஐக்கியம் (Wemon's Fellowship) ஆண்கள் ஐக்கியம் (Men's Fellowship), கேம்ப் ஊழியம் (Camp Ministry), கொயர் ஊழியம் (Choir Ministry) இவைகளில் ஒன்றில் பயபக்தியோடும், அர்ப்பணிப்போடும் பங்குபெற்று தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற உங்கள் ஒவ்வொருவரையும் அன்போடு அழைக்கிறேன். ஜூனியர் ஸ்கூல் (Junior Church) டீச்சர் ஆக வர விருப்பம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

கர்த்தர் உங்களை ஆசீரிவதிப்பராக..

கிறிஸ்துவின் பணியில் உங்கள் ஆயர்,
Rev.M. Christopher Rajendran.
csitcalain@gmail.com
056 7105082

## MEDITATION (தியானம்)

**Theme : (The Church Community must be filled with the knowledge of Gods will - தேவ சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படுதல்).**

Colossians 1 : 9 to 14

அன்புக்குரியவர்களே,

கொலோசே திருச்சபை, வசனங்கள் 3 முதல் 6 ன் படி இயேசுவின் மேல் ஒரு ஆழமான விசுவாசத்தையும், பிறர் மீது ஒரு ஆவிக்குரிய அன்பையும், வரப் போகிற பரலோகம் மீது ஒரு ஆழமான நம்பிக்கையும் வெளிப்படுத்தினார்கள். இந்த மூன்றோடு கூட தேவ சித்ததை அறிகிற அறிவிலே நிரப்பப்பட்டால் தான் ஒரு திருச்சபை ஒரு முழுமையான வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும். (Along with faith, spiritual love ,hope we the church need to be filled with the knowledge of Gods will for our journey towards wholistic growth). என்னுடைய தனிப்பட்ட அந்தரங்க வாழ்வின் மீது, என்னுடைய குடும்ப வாழ்வில் மீது, என்னுடைய திருச்சபை வாழ்வின் மீது, என்னுடைய சமுதாய வாழ்வின் மீது, தேவ சித்தம் என்ன என்பதை நம் ஒவ்வொரு திருச்சபை விசுவாசியும் அறிந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் ஒரு முழுமையான வளர்ச்சியை நோக்கி பயணிக்க முடியும்.

## Gods Will for my personal life :

ஒரு விசுவாசியுடைய தனிப்பட்ட அந்தரங்க வாழ்வைத்தான் personal life என்று சொல்லுகிறோம். இது பிறரால் பார்க்க முடியாத ஒரு வாழ்வு, உன் அந்தரங்கத்தை தேவன் ஒருவரே அறியமுடியும். தேவனுடைய சித்தம் உன் அந்தரங்க வாழ்வைப் பற்றி என்ன? என்பதை முழுமையாக அறிந்திருந்தால் மாத்திரமே ஒரு விசுவாசி தன்னுடைய இருதயத்தின் தோன்றும் எண்ணங்களை, சிந்தனைகளை, ஆசைகளை, இச்சைகளை, குழந்தை பருவதிலுருந்து தூக்கி சுமந்துவரும் தீய பழக்க வழக்கங்களை, தனக்கே உரிய தீய சுபாவங்களை, குணங்களை, குறுகிய கண்ணோட்டங்களை, தாழ்வு மனப்பான்மைகளை, தவறான வாழ்க்கை முறைகளை, அனுதினமும் பரிசுத்த ஆவியின் மூலமாக ஜெபம் பண்ணி, வேத வசனங்களை தியானித்து, தேவ சித்தம் அறிந்து, அதற்கேற்றவாறு தன்னை உருமாற்றிக்கொள்ள முடியும். சங்கீதம் 139:23,24 ன் படி தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்;

என்னை சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து ,நித்திய வழியிலே என்னை நடத்தும். தேவ சித்தத்தின் படி நம்முடைய தனிப்பட்ட, அந்தரங்க வாழ்க்கையை மாற்றி அமைக்காவிடில் ஆவிக்குரிய வாழ்வில் நம் வீழ்ச்சி நிச்சயம் என்பதை உணர்ந்து மனம் திரும்புவோம், தேவ சித்தம் அறிகிற அறிவில் வளர்வோம்.

## Gods Will for my family life :

நம்முடைய தனிப்பட்ட அந்தரங்க வாழ்வை எந்த அளவுக்கு தேவ சித்தம் மேலாளுகை செய்கிறதோ அந்த அளவுக்கு நம்முடைய குடும்ப வாழ்க் கையை மாற்றி அமைக்கும். ஒரு கிறிஸ்தவ கணவனாக, மனைவியாக, பிள்ளைகளாக என்னுடைய பங்கை ஒழுங்காக நிறைவேற்றுகிறேன் என்று நீங்கள் தேவனுக்கு முன்பாக சொல்ல முடியுமா? நீங்கள் தேவனுக்கு பிரியமான ஒரு குடும்பமா? உங்கள் குடும்பத்தை குறித்ததான தேவ சித்ததை அறிய என்ன முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள்?

ஏசாயா 59:21 ன் படி உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தர் உண்மை உள்ளவர், அவர் நம் குடும்பங்களை ஒரு ஆவிக்குரிய, பரிசுத்தமான, அன்புள்ள, ஆற்றலுள்ள குடும்பங்களாக மாற்ற,தேவ சித்தம் அறிவோம்.

## Gods Will for my church life :

திருச்சபையின் வளர்ச்சியில் என் குடும்பத்தின் பங்கு என்ன? இதை பற்றி தேவசித்தம் என்ன? ஆராதனைக்கு வருவதோடு எங்கள் கடமை முடிந்து விட்டது என்று நினைத்தால், நாம் நம்முடைய சுய சித்தத்திற்கு ஏற்றவாறு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். முழு இருதயத்தோடு திருச்சபையின் மற்ற ஊழியங்களில் பங்கெடுப்பதும், தேவனை கனப் படுத்தும் விதமாக குடும்பமாக என்னென்ன காரியங்களில் முழுமனதோடு ஈடுபடுகிறேன் என்று யோசித்து பார்க்க அழைக்கிறேன். கர்த்தரால் கொடுக் கப்பட்ட தாலந்தை அவர் நாம மகிமைக்கென்று பயன்படுத்துகிறேனா? அல்லது புதைத்து வைத்திருக்கிறேனா? யோசிக்க அழைக்கிறேன்.

## Gods Will for my social life :

மேற்கண்ட மூன்று பகுதிகளில் நாம் தேவ சித்தத்தை நிறைவேற்றி முடித்தால், ஒரு மலையின் மேல் இருக்கும் பிரகாசமுள்ள பட்டணத் தைப்போல் நம் சமுதாய வாழ்க்கை இருக்கும் .இந்த பூமிக்கு உப்பாக, ஒளியாக, கிறிஸ்துவின் நறுமணம் வீசும் ஒரு சமுதாய வாழ்க்கையாக உருமாறும். கொலொசேயர் 1:10 ன் படி நாமும், நமது குடும்பங்களும் சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளை தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து ,கர்த்தருக்குப் பிரியமுண்டாக ,அவருக்கு பாத்திரமான புத்திரர்களாய் நடந்துகொள்வோம்.

இப்படிக்கு உங்கள் ஆயர் ,
அருள் திரு .கிறிஸ்டோபர் ராஜேந்திரன்

# நன்றி

நமது திருச்சபையின் மாத இதழான “மன்னா” பத்திரிகையின் இம்மாத செலவினை முழுமையாக ஏற்றுக் கொண்ட **Dr.Alexis Joy** குடும்பத்தினருக்கு திருச்சபையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.
இந்த ஆன்மீக பத்திரிகை வழியாக வரும் எல்லா
தேவ ஆசீர்வாதங்களும்இக்குடும்பத்தாருக்கு
நிறைவாய் இருப்பதாக.
ஆமென்.

"Prayer is not getting man's will done in heaven, but getting God's will done on earth. It is not overcoming God's reluctance but laying hold of God's willingness."

Richard C. Trench

## *செயலரிடமிருந்து........*

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான உடன் விசுவாசிகளே, இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த நாட்களில் தேவனுடைய கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தியதை நினைத்து நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம்.

அருமையானவர்களே, நாம் யாவரும் அறிந்த வண்ணம் போதகர். M. கிறிஸ்டோபர் ராஜேந்திரன் (Rev.M. Christopher Rajendran) அவர்கள் கடந்த ஜீன் மாதம் முதல் நமது திருச்சபையின் ஊழியராக பொறுப்பேற்று நம்மோடு கூட இணைந்து திருச்சபையின் ஊழியங்களை நிறைவாய் செய்து வருகிறார்கள். அவர்களோடு கூட இணைச்து சபையின் முன்னேற்றத்திற்காக செயல்படும் ஒவ் வொருவருக்கும் என நன்றிகளை உரித்தாக்குகிறேன். தொடர்ந்து இவ்வண்ணமாக இணைந்து செயல்பட தேவன் தாமே நம் ஒவ்வொருவர்க்கும் வாய்ப்பினைத் தருவாராக

கடந்த விடுமுறை நாட்களை செலவிடும் வண்ணமாக நமது தாய் தேசம் சென்றிருந்த ஒவ்வொருவருக்கும் தேவன் ஆசீர்வாதமான நாட்களைத் தந்திருப்பார் என்று நம்புகிறேன். சுக பெலத்தோடு மீண்டுமாக பிரயாணப்பட்டு வரவும் நமது பணிகளைத் தொடரவும் திருச்சபையின் உறவிலே நம்மை ஐக்கியப் படுத்திக் கொள்ளவும் கிருபை புரிந்த தேவனுக்கு நன்றி கூறுவோம். .

கடந்த ஜீலை மாதம் 14-7-2017 அனறு அராதனைக்குப்பின் இழைஞர்களின் அவிக்குரிய வாழ்வின் தேவையை அறிந்து அவர்களை ஊக்குவிக்கும் வண்ணமாக போதகர் அவர்களால் இழைஞர் ஐக்யம் (Youth Fellowship) ஆரம்பிக்கப்பட்டது. இதில் அனேகர் கலந்து கொண்டனர். இந்த ஐக்யத்திற்கு திருச்பையின் செயற்குழு அங்கத்தினரான Mr. Herchil Harish அவர்கள் பொறுப்பாளர்களாக செயல் படுவார்கள். போதகர் அவர்களின் வழி காட்டுதலில் இவ் ஊழியம் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

21-07-17 அன்று நமது தாய் திருச்சபையான அபுதாபி திருச்சபையில் புதிதாக பொறுப்பேற்றிற்கும் Rev.James Paul Raj அவர்கள் நமது அழைப்பை ஏற்று நம் ஆராதனையில் கலந்து கொண்டு சிறப்பு செய்தியினை தந்தார்கள். அது நம் யாவர்க்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. மேலும் அவர்களோடு நாம் நம்மை அறிமுகப் படுத்திக் கொள்வதற்கும் அது ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கும் என்று நம்புகிறேன்.

கடந்த 22-07-17 சனிக்கிழமை மாலை முகாம் சந்திப்பு (Camp Vist) ஊழியத்தின் வாயிலாக மெஸியாத் (Mezyad) பகுதியிலுள்ள சில சகோதரர்களை சந்திக்க தேவன் வாய்ப்பினை தந்தார். தொடர்ந்து அவர்களை சந்தித்து வருகிறோம். நேரம் கிடைக்கும் அனைவரும் இந்த ஊழியத்தில் நம்மை ஐக்கியப்

படுத்திக் கொள்ள முயல்வோம். இந்த தேசத்தில் தங்கள் உற்றார் உறவினரை விட்டு தனியாக இருந்து பணி புரியும் சகோதரர்களோடு நாம் இணைந்து ஜெபிப்போம், தேவனின் அன்பை பகிர்ந்து கொள்வோம்.

மேலும் கடந்த மாதம் முதல் ஆண்கள் ஜெப ஐக்கியத்தில் இன்னும் அனேகர் தங்களை இணைத்துக் கொள்ளும் வண்ணமாக மாத்தின் முதலாம் மூன்றாம் வெள்ளிகளில் மாலை 0630 மணிக்கு நமது ஆராதனை நடைபெறும் *Hall* ல் கூடி வருகிறோம். தயவு செய்து ஆண்கன் அனைவரும் இந்த கூடுகையில் பங்யேற்க முயற்சிப்போம்.

தொடர்ந்து வரும் நாட்களில் திருச்சபையின் வளர்ச்சிக்காக செயல் படுத்தும் ஒவ்வொரு காரியங்களிலும் நாம் யாவரும் உற்சாகத்தோடும், ஜெபத்தோடும் பங்கு பெறுவோம், செயல்படுவோம். தேவன் தாமே நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர்வாதத்தின் பாதையில் வழி நடத்துவாராக.

**கிறிஸ்துவின் அன்பில்.**
***M.Nesamony***

## பயத்தின் விளைவு

**" அவர்களுக்து பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை அறியப்படாத இரகசியமும் இல்லை". (மத். 10:26)**

பயத்தினால் ஏற்ப்படும் முக்கியமான எதிர்விளைவு என்னவென்றால். அது நம்முடைய எதிராளியை அல்லது எதிரான சூழ்நிலையை அளவுக்கதிகமாக கணக்கிட நம்மை ஏவிவிடும். எதிராளியின் வலிமையும், எதிரான சூழ்நிலையின் பயங்கர நிலையும் பன்மடங்கு பெரிதாக நமக்கு தெரியும்போது, நாம் நம்பியிருந்த ஆயுதங்களையும் கீழே போட்டுவிடுகிறோம்.

நம்முடைய எதிராளிகளின் பலத்தையோ, அல்லது நமக்கு எதிராக வருகின்ற பிரக்சினைகளின் கடுமையையோ நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது என்பது உண்மைதான். அதே வேளையில் எதிரான சூழ்நிலைக்கு முன்னால் நம்முடைய பலத்தையும், திராணியையும் குறைத்து மதிப்பிடுவது தவறு. சிம்சோனுக்கு முன்பாக ஆயிரக்கணக்கில் எதிரிகள் ஒன்றுதிரண்டு வந்தார்கள். அந்தச் சூழ்நிலை மிகவும் பயங்கரமானதுதான். ஆனால் சிம்சோனோ சரணடையவோ, ஓடித் தப்பிக்க முயற்விக்கவோ இல்லை. மாறாக, தேவ ஆவியின் பலமும், தாங்குதலும் தனக்கு ஆதரவாக உண்டு என்ற நம்பிக்கையோடு தன்னை குறைத்து மதிப்பிடாமல் தைரியமாக எதிரிகளை சந்தித்தான். எனவே ஒரு பச்சையான கழுதையின் தாடை எலும்பைக்கொண்டு ஆயிரமானவர்களை அழித்திட அவனால் முடிந்தது.

ஆனால் ஒருவேளை பயம் நம்மை பற்றிக்கொள்ள இடம் கொடுத்து விடும்போது. நாம் பெற்றிருக்கின்ற ஆற்றலையும் இழந்து, சூழ்நிலைகளுக்கு முன் சரணாகதியாகி விடுவோம். கோலியாத் சவுலுக்கெதிராக சவாலிட்டபோது. சவுல் கோலியாத்தின் பலத்தை அளவுக்கதிகமாகக் கணக்கிட்டு தன்னையோ மிகக்குறைத்து மதிப்பட்டான். எனவே எதிரிக்கு முன்பாக அவன் பயந்து கலங்க மட்டுமே முடிந்தது. ஆனால் தாவீதின் பார்வை வித்தியாசமாயிருந்தது. கோலியாத் பெரியவன்தான். ஆனால் தனக்கு துணை நிற்க்கும் தேவன் அவனைவிட பெரியவர் என்று அவன் விசுவாசித்தான். எனவே அவனால் கோலியாத்தை வீழ்த்த முடிந்தது.

சவுல் தேவ உறவை இழந்தபின் அவனை அதிகமாகப் பாதித்த ஒன்று பயம். கோலியாத்தைக் கண்டு பயந்தது மட்டுமல்ல. அவன் தாவீதைக்கண்டும் பயந்தான். ஆவனால் தன்னுடைய புகழ் குன்றிப் போகும், ராஜ பதவி பறிப்பேய்விடும் என்றும் பயந்தான். இறுதியில் அவன் பயம் நிறைந்த மனிதனாகவும் மாறி போனான். ஆம். தேவ உறவின்மையும், தேவ உறவிழப்பும் நம்மை தனித்து நிற்ப்பதாக எண்ணவைப்பதோடு, வலிமையற்றவர்களாக எண்ணவைத்து விடும் எனவே பயம் நம்மைச்சகல நிலையிலும் பலவீனப்படுத்திவிடும். அதற்க்கு முக்கியமான ஒரு காரணம் அனுதின வாழ்வில் தேவ உறவையும், ஐக்கியத்தையும் உறுதி செய்திட மறுப்பதே. தேவ ஐக்கயத்தில் உறுதி வந்துவிட்டால். நாமும் தாவீதைப்போல சூழ்நிலைகளை எளிதாக வெல்ல முடியும்.

**- நெல்சன் சோபித ராஜ்.**

## திருமறையைப் படியுங்கள், புதையல்களைக் கண்டு பிடியுங்கள், நித்திய ஜீவனை சுதந்தரியுங்கள்.

**(அதிகாரங்கள்: ஆதி.1-15)**

1. முதன் முதலில் உலகிற்கு அறிமுகமான ஆறுகளின் பெயர்கள் என்ன?
2. ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியை கடவுள் எதனால் காவல் செய்தார்?
3. நோவாவின் பேழை தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த போது வெளியே பறந்து சென்ற இரண்டு பறவைகள் யாவை?
4. நோவாவோடு கடவுள் உடன்படிக்கை செய்த போது கொடுக்கப்பட்ட அடையாளம் என்ன?
5. முதன் முதலாக கடவுளுக்கென்று பலிபீடம் கட்டி தொழுது கொண்டவர் யார்?
6. ஆபிரகாமை ஆசீர்வதித்த ராஜாவின் பெயர் என்ன?
7. ஆபிரகாம் செய்த முதல் யுத்தத்தின் காரணம் என்ன?
8. ஆபிரகாமின் வீட்டு விசாரணைக்காரன் யார்?
9. ஆபிரகாமும் லோத்தும் பிரிந்த போது ஆபிரகாம் குடியிருந்த இடம் எது?
10. ஜனங்களை எனக்குத் தாரும் எனக் கேட்டது யார்?

### ஜீலை – ஆகஸ்ட் சரியான விடைகள்

1. அதோனியா, யோவாப், சீமேயி 1இரா. 2:25, 2:34, 2:46
2. சீதோனியர் 1இரா. 5:6
3. இரண்டு கற்பலகைகள் 1இரா. 8:9
4. எகிப்து 1இரா. 8:51
5. கேசேர் பட்டணம் 1இரா. 9:16,24
6. பஸ்மாத் 1இரா. 4:15
7. சாலொமோன் ராஜாவுக்கும், ராஜாவின் பந்திக்கு வரும் யாவருக்கும், குதிரைகளுக்கும் ஒட்டகங்களுக்கும் வேண்டிய உணவுகளைக் கொடுப்பது 1இரா.4:27,28
8. நிலைகள் - ஒலிவ மரம் 1இரா. 6:32, கதவுகள் - தேவதாரிமரம் 1.இரா. 6:34
9. 13 வருடங்கள் 1இரா. 7:1
10. ரெகொபெயாம் 1இரா. 11:43

**ஜுலை – ஆகஸ்ட் வேத வினா விடைப்போட்டி - விடைகள் எழுதியவர்கள்::**

1. திருமதி. ஜெயின் ராஜவேல்
2. திருமதி. பிப்லின் நெல்சன்.
3. திருமதி. ஜெயந்தா ஜாண்

# Children's Page

### *"CHRILDREN"*

## Grow in confidence so you can bring Christ into everyday conversations.

School is what our lives revolve around as teens. Days are filled with classes, homework and constant chatter. Even though we are surrounded by people who do not know the amazing message of the gospel, we shrink into our bubbles and resist the need and urge to be bold for Christ.

As Christians we are called to be disciples of God. In Colossians 1:28 it states; "He is the one we proclaim, admonishing and teaching everyone with all wisdom, so that we may present everyone fully mature in Christ." It is our job to be planting the seed of the gospel into the hearts and minds of non-believers so they can be fully-equipped for the return of Christ.

As teens, we have lots of opportunities to be witnesses for Jesus through our words and actions. It is definitely easier said than done to be bold for Christ when we constantly fear the judgement of our peers. The urge to curl into a ball when the bible or God is mentioned will continue to happen unless we stride to make a change, to stand up and be bold for Christ.

**Here are 6 ways to be bold for Christ at school:**

## 1. Be Different

In today's society we constantly fall into the trap of wanting to be like everyone else. However, as God's people we should instead be striving to be like Jesus. In a sinful world, as Christians we should be living a life that honours God. This can be in the form of things like serving. In Mark 10:45 it states; "For even the Son of Man did not come to be served, but to serve, and to give his life as a ransom for many." Like Jesus we should remember to put others first and aim to look out for those arounds us before ourselves.

If we want to honour God we also need to be careful of our choice of language, actions and activities we choose to partake in. The fact that we act differently to the people around us, and choose not to follow the stereotypical path of today's teenagers, it places questions into the minds of others, like why are they different. It is these initial questions that plant the seed of the bible into their minds.

## 2. Be Confident

One of the hardest ways to be bold for Christ is speaking openly about Jesus. This is daunting, but the easiest way to overcome this is by doing it. As cliché as it sounds, practice makes perfect. The more you bring it up, the more comfortable you and others will feel about it. Be confident to bring Christ into everyday conversations.

This can be as simple as when asked what you did over the weekend, replying "I went to youth group where we learnt about…" or saying "I lead a kid's group at my local church, do you go to church?" It is this casual conservation that will build your confidence and allow you to open deeper discussions about Christ. Do not fear

the judgement of your peers, or worry about other people's opinion of you, because the only opinion that should matter is God's.

## 3. Invite people to your church or youth group

As a regular member of my local youth group, one of our goals as a youth is to fill the hall we currently meet in. Currently filling about 2/3 of it, our minister gave as the challenge to invite someone every week. It is this challenge I put forward to all of you. Youth groups are not just for the established Christians but for everyone. Sometimes it can feel awkward to ask one of your friends who does not believe in Christ to your youth group or church, but we need to move past this so that they can hear the amazing news of Christ.

Be bold in asking your friends, one way to make it easier is at the beginning of each term pick one of your friends who you want to focus on. Between classes or at lunch ask them if they have any plans for the weekend, if not, would they want to come to your youth/church. Being resilient and persistent even when they decline, also shows them that it is something that is important to you. If you live nearby offering them a lift can also be really helpful, as a lot of the time the only reason they say no is because they are worried to go somewhere foreign to them by themselves.  So I challenge you to be bold and invite your friends!

## 4. Use resources already available

There are many resources already available to help you be bold for Christ at school. One is SRE/Christian Studies. I know at my school a lot of the time my friends would joke around, not pay attention, or use these classes as a time to do homework. However as Christians we can be using this time to challenge ourselves and start interesting conversations. Have open discussions on the topics touched on in these times. Do not take offence if they have a negative response because you have at least stimulated thoughts in their minds.

Another great resource is if your school has a Christian group. It took me 3 years before I was a weekly member of my school's group. It was not because I did not follow God, it was because I was worried that my friends would think I was weird. I placed my own self-doubts before God and now I see that benefited no one. Do not be like me, if there is a opportunity take it, stand up for your belief whether that be in the form of asking questions, joining the lunchtime Christian group or opening discussions about what you just learnt. Remember that it is not for your glory but for God's.

## 5. Be Resilient

One of the most important ways to be bold for Christ at school is by being resilient. One of the easiest things to do when you are rejected is to back down. However, as disciples of God, we must stand firm even when people reject us for being Christian.

If someone treats you differently because of your faith, don't give up. Since the beginning of Christianity, we have been faced with obstacles. As teenagers, we will have different struggles and different reasons for why we want to give up but we need to be resilient. Be resilient so that you can be a light for those who do not know Christ.

## 6. Prayer

Everything we do is for God, by God's command. As we seek to be bold for Christ at school, we first need to seek guidance from God. It is not just from our works that someone comes to know God, but through His work in them. As God's disciples, we need to work in partnership with Him, so we must always remember to ask him for help because as it states in Matthew 7:7:

**"Ask and it will be given to you; seek and you will find; knock and the door wil l be opened to you."**


Being a Christian at school is hard but it is there that we can be bold for Christ. We are given so many chances as teenagers, so take these opportunities to plant seeds and be a light for those who do not know the message of the gospel.

**" In the same way, let your light shine before others, that they may see your good deeds and glorify your Father in heaven."** – Matthew 5:16


***Compiled***

*The love of Christ breaks through the vaulting, and leads us up into the free sky above, expanding to the very throne of Jehovah, and drawing us still upward to the infinite heights of glory.*

*Frances Ridley Haverga*




## *Highlight the given words*



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| V | O | Q | V | V | D | H | O | Q | T | V | Y | W | Q | L |
| M | J | C | L | S | D | E | A | Q | M | H | C | U | H | W |
| V | Z | V | B | A | L | H | A | N | J | D | E | X | L | P |
| S | C | I | M | R | T | Y | N | T | D | H | M | F | F | N |
| L | L | R | S | U | U | T | I | S | I | S | E | D | T | W |
| A | Y | P | O | M | N | C | R | N | Z | N | R | A | S | K |
| N | M | M | L | M | W | S | A | B | G | A | G | L | R | E |
| D | G | R | F | U | A | T | H | O | U | G | H | T | S | T |
| E | U | B | N | R | S | O | O | Y | G | Z | B | T | R | D |
| R | N | Q | H | D | H | M | A | E | Y | E | B | R | C | I |
| U | C | A | S | E | E | A | R | V | I | R | B | F | J | B |
| R | L | C | V | R | D | C | O | I | R | T | C | K | K | N |
| A | E | C | E | E | V | H | S | L | L | I | V | P | A | P |
| S | A | B | O | D | Y | J | A | C | C | A | E | M | T | B |
| S | N | O | K | B | I | M | M | O | R | A | L | I | T | Y |

| | | | |
|---|---|---|---|
| mouth | unclean | immorality | man |
| stomach | evil | theft | eating |
| body | thoughts | lying | unwashed |
| heart | murder | slander | hands |

## Children who found the July – August Correct Answer..

1. Annlin Sophia Nelson
2. Angelin Sophia Nelson
3. Dennis Roger
4. Diniya Sunshine
5. Johan Sanjo
6. Joshikha Varshni
7. Joshua Koshy

*Well Done Children*

TIME FOR COLOURING



# ஆணிச் சாமியார்

ஹரித்துவாரத்தில் சில காலத்துக்கு முன் நானொரு காட்சியைக் கண்டேன். சந்நியாசியொருவர் ஆணிகளாலாகிய படுக்கையில் படுத்திருந்தார். இவ்வாறு தமது உடலைச் சித்திரவதை செய்து, தம்மைத்தாமே வதைத்துத் துன்புறுத்துவதன் நோக்கம் என்னவென்று கேட்டேன். அவரோ என்னைக் கண்டு, 'நீ ஒரு சந்நியாசியாய் இருந்தும் கூட உனக்குத் தெரியாதா?' என்று கேட்டார்.

'கூராணிகளால் தேகத்தை குத்தி வேதனையனுபவிப்பது கடுந்தவத்தின் அடையாளம். இவ்விதமாகக் கடவுளைத் தொழுகிறேன். ஆனால், இந்த ஆணிகளால் நான் அனுபவிக்கும் துன்பம், என் பாவங்களிலிருந்தும் அக்கிரமங்களிலிருந்தும் எனக்கு கிடைக்கும் துன்பத்தைப் போலக் கொடியதல்ல. சுய விருப்பத்தை அடக்கி ஒடுக்குவதன் மூலம் இரட்சிப்பைப் பெறுவது என் குறிக்கோள்' என்றார்.

அவர் எத்தனை காலமாக இதைச் செய்து வருகிறார் என்றும், எதுவரைக்கும் தமது இலட்சியத்தை அடைந்திருக்கிறார் என்றும் கேட்டேன். பதினெட்டு மாதங்களுக்கு முன்னால் இக்கடுத்தவத்தைத் தான் ஆரம்பித்ததாகவும், இதுவரை தமது இலட்சியத்தை அடையவில்லை என்றும், இக்குறுகிய கால அளவுக்குள் அதை அடைய முடியாதென்றும் விடையளித்தார். 'என் இலட்சியம் நிறைவேற பல வருடங்கள் - ஏன், பல பிறப்புகள் தேவையாய் இருக்கும் என்றார்.

என் சொந்த முயற்சிகளால் இரட்சிப்பைப் பெற முயன்று நான் அடைந்த தோல்வியின் அனுபவத்தைக் கூறினேன். எவ்வாறு ஒரே கணத்தில் என் ஆண்டவர் இயேசு என் மனதை மாற்றி, அமைதியற்ற என் ஆன்மாவுக்கு சாந்தியையும், சமாதானத்தையும் அருளினார் என்றும் அறிவித்தேன்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப்.16:31)**

(இது சாதுசுந்தர் சிங் அவர்களால் எழுதப்பட்ட அவருடைய வாழ்க்கையில் சந்திந்த அனுபவம்.)

# <u>விசுவாசத்தை புதுப்பித்தல்</u>

**"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞான முள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, ….."** (2 தீமோ.3:15)

*ஒருமுறை மகா அலெக்சான்டர் போர் ஒய்ந்த நிலையில், தன்னிடம் உள்ள பொருட்களை தன் நண்பர்களுக்குப் பரிசாகக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். அவருடைய பெருந்தன்மையால் தன்னிடம் உள்ள அனைத்தையும் பிறருக்குக் கொடுத்தார். இதைப் பார்த்த அவரின் நண்பர்களில் ஒருவன், அரசே இப்படியே கொடுத்துக் கொண்டிருந்தால் நீர் அனைத்தையும் இழந்து விடுவீர், உம்மிடம் ஒன்றும் இராது என்றார். அதற்கு மகா அலெக்சான்டர் புன்முறுவலுடன், நான் அனைத்தையும் இழந்தாலும் என்னிடம் ஒன்று மட்டும் நிலைத்திருக்கிறது. அது தான் கடவுள் மீது நான் வைத்துள்ள விசுவாசம் எனப் பதிலளித்தாராம்.*

கிறிஸ்தவர்களின் வாழ்விலே விசுவாசம் இன்றியமையாதோர் பண்பாகும். வாழ்விலே கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்திடவும், வாழ்விலே கிறிஸ்து தரும் நன்மைகளைப் பெற்றிடவும் விசுவாச வாழ்வே மிக இன்றியமையாதது. அது மட்டுமல்ல, நமது வாழ்வைச் சீர்ப்படுத்த, ஒழுங்குபடுத்த விசுவாசம் நமக்குப் பெரிதும் துணை செய்கிறதுபல கிறிஸ்தவர்கள் கடவுள் மீது கொள்ளும் விசுவாசத்தை நாளடைவில் குறைத்து விடுவதுண்டு. அவிசுவாசிகளாகவும் மாறி விடுவதுமுண்டு. ஆண்டவர் இயேசுவோடு வாழ்ந்து, அவரின் ஆற்றலை அறிந்து, அற்புத அடையாளங்களைக் கண்ணால் கண்ட ஒருவர் பேதுரு. இயேசு கடல் மீது நடப்பதைக் கண்டு தானும் நடக்க விரும்பினார். ஆனால் அவரோ அலையைக் கண்டு பயந்து நடுங்கி அலறினார், இயேசுவோ, **"அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்படுகிறாய்"** என்றார். அவ்வாறே தோமாவின் அவிசுவாசத்தைக் கண்ட இயேசு கிறிஸ்துவும், **"அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாயிரு"** என்கிறார்.

இந்தச் செய்திகள் அனைத்தும் நமக்கு கற்றுத்தரும் உண்மை, மானிட வாழ்வு சீர்பெற்றிட கடவுள் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தைத் தினமும் புதுப்பித்துக் கொண்டு, வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதாகும். நாம் நமது விசுவாசத்தைப் புதுப்பிக்கும் போது நாம் நீதிமான்களாக மாற்றப்படுவோம். எனவே விசுவாசத்தை தினமும் புதுப்பித்து நம்மை, நம் வாழ்வை, நம் மூலம் பிறரை சீர்ப்படுத்துவோம்.

**சிந்தனைக்கு** : *விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்.*

**Compiled**

## ***பாவிகளின் நேசர்***

**"இழந்துபோனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்." (லூக்.19:10)**

இழந்து போனதைத் தேட, பாவிகளை இரட்சிக்க, மனுஷ குமாரன் வந்தார். தேவ அன்பின் ஆழத்தை இதில் பார்க்கலாம். நீதிமான்களையல்ல பாவிகளையே அழைக்க வந்தேன் என்கிறார். என்றாலும் அப்போஸ்தலன் ரோமர் 3:10-18-ல் இவ்வுலகத்தில் நீதிமான் ஒருவனாகிலுமில்லை என்கிறார். அப்படியானால் இரட்சகர் சொல்லுகிற நீதிமான்கள் என்பவர்கள் யார்? அவர்கள் தங்களைத் தாங்களே நீதிமான்களென்று எண்ணுகிறவர்கள். இவர்களுக்குப் பாவ உணர்ச்சியில்லை. மனந்திரும்புதல் தங்களுக்கு அவசியமல்ல என்று இவர்கள் நினைக்கிறார்கள். இவர்களை அல்ல தங்கள் பாவத்தை உணர்ந்து தவிக்கும் பாவிகளை அழைக்க ஆண்டவர் வந்தார். இது தேவ அன்பு.

நான் இந்துவாக இருந்த சமயத்தில் பல அவதாரங்களைக் குறித்து வாசித்தேன். அவைகள் யாவும் நீதிமான்களை இரட்சிக்கவும் பாவிகளை சங்காரஞ்செய்யவும் இவ்வுலகத்தில் வந்தவை. பலபல சமய நூல்களில் கூறப்படுகிற பலபல அவதாரங்களின் திரட்டில் பாவிகளை இரட்சிக்க வந்த ஒரே அவதாரத்தின் நாமத்தை கேட்டேன். அந்த அவதாரம் இயேசு பெருமானின் மனித அவதாரமே. பாவிகளை இரட்சிக்க வந்ததே தேவ அன்புச் செயல்.

ஆயினும் அடிக்கடி ஜனங்கள் இது விஷயமாகக் கேட்கும் ஒரு கேள்வி உண்டு. கடவுள் சர்வ வல்லவர். அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும். அப்படி அவர் ஒரு வார்த்தையால் பாவிகளை இரட்சிக்கக் கூடும். அதனால் அவர் மனிதரை இரட்சிக்க மனித உரு எடுத்து இவ்வுலகத்தில் வர அவசியமில்லையே என்பார்கள். இதற்கு உத்தரவாக ஒரு உதாரணத்தைப் படியுங்கள்.

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருடைய மந்திரி கல்விமான், நற்குணசாலி. அவர் பாலஸ்தீன தேசத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் உள்ளத்தில் இரட்சிகரைக் குறித்த ஒரு பலத்த அசைவுண்டாகவே அவர் கிறிஸ்தவனானார். அவர் தம் நாட்டுக்குத் திரும்பின போது தான் கிறிஸ்தவன் என்றும், பாவிகளை இரட்சிக்க இவ்வுலகத்துக்கு வந்த இயேசு இரட்சகரை விசுவாசிப்பதாகவும் சொன்னார். இராஜா அவரை நோக்கி நான் ஒரு வேலைக்காரனுக்குக்

கட்டளை கொடுப்பேனானால் அது உடனே ஆகும். அப்படியிருக்க, இராஜாதிராஜாவாகிய பகவான் பாவிகளைத் தமது ஒரே வார்த்தையினால் அவதாரமெடுத்துவர அவசியமென்ன என்றார். மந்திரி ஒருநாள் தவணை பெற்று வீட்டுக்குச் சென்றார். அவர் ஒரு தேர்ந்த தச்சனை அழைத்து இராஜாவின் ஒரு வயதுள்ள குமாரனைப் போல ஒரு பொம்மை செய்து அதே விதமாக அதை உடுத்தி, அடுத்த நாள் கொண்டுவரும் படி கற்பித்தார். அடுத்த நாள் இராஜாவும் மந்திரியுமாக ஆற்றில் படகில் ஏறிச் செல்கையில் இராஜா தமது கேள்விக்குப் பதில் சொல்லும்படி மந்திரியைக் கேட்டார். அச்சமயத்தில் தச்சனும் மரப்பொம்மை கொண்டு வந்து கரையில் நின்றான். இராஜா அவன் கையில் இருப்பது தமது குழந்தை என்று எண்ணி அதைத் தூக்கி எடுக்க தமது கையை ஏந்தினார். தச்சனோ மந்திரி ஆலோசனைப் படி பொம்மையைத் தண்ணீரில் நழுவ விட்டான். இராஜா இதைக் கண்டவுடனே தண்ணீரில் குதித்தார். மந்திரி அவர் கையைப் பிடித்திழுத்து மகாராஜாவே, தாங்கள் நீரில் குதிக்க அவசியமில்லையே ஒரு கட்டளை எனக்குக் கொடுத்தால் போதாதா? தாங்களே குதிக்க அவசியமென்ன என்றார். இராஜா அதற்கு உத்தரவாக ஒரே ஒரு வார்த்தை சொன்னார். அதாவது அன்பு, மந்திரி சர்வ வல்ல கடவுள் ஒரு வார்த்தையினால் இவ்வுலகத்தை இரட்சிக்காது தாமே அவதாரமெடுத்து இவ்வுலகத்தில் வந்ததற்கு காரணமும் அன்பே என்றார்.

பலர் அவர் தெய்வமாக இருந்தே உலகத்தை இரட்சித்திருக்கலாமே, மனு உரு எடுக்க அவசியமென்ன என்பார்கள், ஒரு நாள் நான் ஒரு ஆற்றைக் கடக்க நேர்ந்தது. அவ்விடத்தில் வேண்டிய காற்றும் இருந்தது. அது நான் சுவாசிக்கவும், உயிர் பிழைக்கவும் போதுமானது. எனினும், அது என்னைத் தூக்கி அக்கரைப்படுத்தக் கூடாது. சிறிது நேரத்துக்குப் பின் ஒருவன் ஒரு தோல்ப்பையைக் கொண்டு வந்து அதில் காற்றடைக்க அது தண்ணீரில் மிதந்தது. நான் அதில் உட்கார்ந்து மறுகரை அடைந்தேன். எங்கும் நிறைந்திருந்த காற்று செய்யக் கூடாத அவ்வேலையைப் பையில் அடைபட்ட காற்று செய்தது. அவ்வாறே கடவுளும் எங்கும் நிறைந்தவராயினும் அவர் மனுஷ அவதாரமென்னும் பந்தயத்திற்குட்பட்ட போதே மனிதரை அக்கரைப் படுத்தக் கூடியவரானார். பையிலிருந்த காற்றும் வெளியேயிருந்த காற்றும் ஒன்றேயாயினும் இது சிறு இடத்தில் அடைபட்டு அளவுக்குட்பட்ட போது மாத்திரம் அக்கரை போக எனக்கு உதவிற்று. அவ்வாறு அளவற்ற கடவுள் அளவுக்குட்பட்ட மனுஷனான போதே அவர் பேரில் விசுவாசிக்கிறவர்களைப் பாவத்தினின்று

இரட்சிக்க வல்லவரானார். இவ்வாறு பாவிகளை இரட்சிக்கவே மனுஷகுமாரன் வந்தார். ஏனென்றால், ஏசாயா சொல்லுவது போல் நாம் எல்லாரும் ஆடுகளைப் போல் வழி தப்பித் திரிந்தோம் (ஏசாயா 53:6). இவ்வாறு காணாமற்போன ஆடுகளை இரட்சிக்கவே மனுஷகுமாரன் வந்தார் (யோவான் 10:11-18).

காஷ்மீர் தேசத்தில் ஒரு மனுஷனிருந்தான். அவனுக்கு நூற்றுக்கணக்கான ஆடுகளிருந்தன. கூலிக்காரர் அவைகளைக் காடுகளில் மேய்ப்பது வழக்கம். எஜமான் தினந்தோறும் இரண்டு மூன்று ஆடுகள் காணாமற்போனதாகக் கேள்விப்பட்டான். அப்பொழுது அவன் தன் ஆட்களைக் கூப்பிட்டுக் காணாமற்போன அவ்வாடுகளை கொண்டுவரக் கற்பித்தான். அவர்களோ காட்டு மிருகங்களுக்கு பயந்து, அதற்கு சம்மதிக்கவில்லை. எஜமானே தன் ஆடுகளை எவ்வாறேனும் கொண்டுவர வேண்டுமென்கிற ஆவலால் அவைகளைத் தேடிப்போனான். அவைகள் காயப்பட்டும், வழிதப்பியும், சிதறியுமிருந்தன. அவைளையெல்லாம் ஒரு இடத்திற் சேர்த்து அவைகளை வீட்டுக்குப் பத்திரமாய் கொண்டு வந்து சேர்க்க உபாயம் தேடினான். அவைகள் எஜமானை இது வரைக்கும் கண்டதில்லை. அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை. பின் எப்படி அவை அவன் பின் செல்லும்? ஆகையால் அவன் ஒரு ஆட்டுக் தோலைப் போர்த்துக் கொண்டு, ஆடு போன்று அவைகளுக்கு முன் சென்றான். ஆடுகள் அவனைத் தங்களைப் போலொத்த ஆடென்று எண்ணி, பயமின்றி அவனுக்குப் பின் சென்றன. அவனும் அவைகளைப் பத்திரமாய்த் தனது வீடு கொண்டு வந்து சேர்த்தான். சேர்ந்த போது தான் போர்த்திருந்த ஆட்டுத் தோலை எறிந்து மனுஷனாக ஆடுகளுக்கு முன் நின்றான். ஆடுகளுக்கு இது ஆச்சரியமாயிருந்திருக்கலாம்; என்றாலும் ஆடுகள் இரட்சிக்கப்பட்டன. ஏனெனில் ஆடுகளை இரட்சிக்க எஜமான் அன்பினால் ஆடுகளோடு ஆடானான்.

அவ்வாறே காணாமற்போன மனுஷ ஜாதியை இரட்சிக்க கர்த்தர் தமது ஊழியர் பலரை அனுப்பியிருந்தார், என்றாலும் ஆடுகள் இரட்சிக்கப்படவில்லை. அவைகளை இரட்சிக்க அவரே வரவேண்டியதாயிற்று. ஆயினும் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை (1தீமோ.3:16); யோவான் 1:18) ஆகையால் மனிதரை இரட்சிக்க அவரும் அன்பினால் மனிதனானார். மனிதரை இரட்சித்தார். மனிதரோ அவரை வெறும் மனிதனென்று எண்ணுகிறார்கள். புற மதத்தார் மாத்திரமல்ல, கிறிஸ்தவர்களிலும் பலர் அவ்வாறு எண்ணி கிறிஸ்து ஒரு மஹான் என்பார்கள். தேவனல்ல என்று சாதிப்பார்கள். ஆனால்,

இவ்வுலகத்தை விட்டு மேலுலகம் சேரும் போது இது பொய் என்பதைக் கண்டு கொள்வார்கள். ஏனென்றால் அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம் (கொலோ.1:15) அவரைக் கண்டவன் பிதாவைக் கண்டவன் (யோவான் 14:9). ஆம், தெய்வம் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷனானார். இது அன்பேயன்றி வேறென்ன?

நாம் காணாமற்போன ஆடுகளே. நானும் அவரை விட்டு வழி தப்பித் திரிந்த ஆடாயிருந்தேன். வேத புஸ்தகங்களைக் கிழித்து அக்கினியில் அவைகளைப் போட்டு எரிக்கிறவனாயிருந்தேன். என்னையும் அவர் தேடி வந்தார். இரட்சித்தார். இப்பொழுது என் உள்ளத்தில் பூரண சமாதானமும் சந்தோஷமும் அவர் மூலமாய் உண்டு.

இதை வாசிக்கும் நண்பா, நீயும் காணாமற் போனவனா? உலகத்தை விட்டு உன் உள்ளத்தை அவர் புறமாகத் திருப்பு, மனஸ்தாபத்தால் அதை அவருக்கு ஒப்புக் கொடு. ஆவர் உன்னையும் இரட்சிப்பார். அந்த ஆட்டு எஜமானைப்போல் நமக்கு முன்னே அவர் நடப்பார். நாம் அவரைப் பின்செல்வோமானால் நம்மை இரட்சித்துக் கடைசியாகத் தமது பரம வீட்டுக்குள் நம்மைக் கொண்டு போய் சேர்ப்பார். நாம் அங்கே அவரோடே என்றென்றைக்கும் மோட்ச பாக்கியமனுபவிப்போம்.

இதற்கென்று கர்த்தர் நமக்குக் கிருபை செய்வாராக. ஆமென்.

**(இது ஒரு சாது சுந்தர் சிங் பிரசங்கம்)**

# தென்னிந்தியத் திருச்சபையின் அடையாளச் சின்னம் (Logo)

வெவ்வேறு பாரம்பரியங்களோடும், கொள்ளைகளோடும் தென்னிந்தியாவில் செயல்பட்டு வந்த சீர்திருத்தத் திருச்சபைகள் ஒரே திருச்சபையாக செயல்பட வேண்டுமென்ற நோக்கத்துடன், தங்கள் திருச்சபையின் பிரிவுகளை விட்டுவிட்டு, 1947 செப்டம்பர் 27 ஆம் நாள் ஒன்றாக இணைந்து உருவாக்கியதே தென்னிந்தியத் திருச்சபை. இந்த ஐக்கியத்தையும், தென்னிந்தியத் திருச்சபையின் சிறப்புக்களையும் அருட்பணிகளையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு அடையாளச் சின்னத்தை (Logo) உருவாக்கி 1972 செப்டம்பர் 27 ஆம் நாள் தென்னிந்தியத் திருச்சபையின் வெள்ளிவிழா (Silver Jubilee celebration) கொண்டாட்டத்தின் போது வெளியிட்டனர். இச்சின்னம் அநேக உண்மைகளை நமக்கு கற்று தருகிறது.

தென்னிந்தியத் திருச்சபையின் அடையாளச் சின்னத்திலுள்ள குறியீடுகள் தலைமுறை தலைமுறையாய் திருச்சபையிலுள்ள மரபுகள், இந்திய கலாச்சார தகவுகள், மற்றும் பாரம்பரியங்களை வெளிப்படுத்துகிறது.

***'சிலுவை'* : *'இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னை தியாக பலியாக ஒப்புக்கொடுத்தார்'*** என்பதையும், அதுவே திருச்சபையின் அடிப்படை விசுவாசம் என்பதையும் Logo விலுள்ள சிலுவை வெளிப்படுத்துகிறது. இச்சிலுவை, 'இறைமக்களின் பாவங்கள் கழுவப்பட்டு தூய்மையாகி, பரலோக வாழ்விற்காக அவர்கள் தகுதி படுத்தப்படும்' செயலை குறிப்பிடுகிறது. சிலுவையின் நான்கு முனைகளும் சம நீளத்தில் செய்யப்பட்டுள்ளது. இது சமத்துவத்தையும், இறைமக்கள் வாழும் சூழலில் பிறருடன் சமாதானமாக வாழ வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

'***தாமரை பூ***' **:** Nelumbo nucifera என்ற அறிவியல் பெயர் கொண்ட தாமரை பூ, இந்தியாவின் தேசிய மலர். சூரியன் உதயமாகும் காலை வேளையில் மலர்ந்து, சூரியன் மறையும் மாலை வேளையில் வாடிப்போகிறது. இது சேற்றிலோ, குளங்கள் மற்றும் நீர் நிலைகளிலோ மலர்ந்து அழகுடன் காணப்படுகிறது. தாமரை அதன் வேர்களை மண்ணில் பதித்து, நீர்மட்டம் உயர உயர அதுவும் மேலோங்கி வேகமாக வளருகிறது. எச்சூழலிலும் அதன் பூக்களோ, இலைகளோ தண்ணீருக்குள் அமிழ்ந்து போவதில்லை.

திருச்சபை உறுப்பினர்கள் கடவுளின் கிருபையை சார்ந்து விசுவாசத்தில் ஆழமாய் வேரூன்றி வாழ வேண்டும் என்பதையும், எச்சூழலிலும் பாவ சேற்றில் மூழ்கிவிடாமல், இந்த உலகில் நறுமணம் வீசும் நற்கந்தங்களாக திகழ்ந்து, ஒருமைப்பாட்டின் உறவில் நிலைத்திருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. (2கொரி. 2:15) இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக் குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்).

தூய ஆவியாரின் அக்கினிமயமான நாவுகளால், சிலுவையின் இருபுற கைகளும், தாமரை பூவின் இதழ்களும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது (அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள். . . அப். 2 : 3). இது கடவுளோடு இறைமக்களுக்கு உள்ள உறவை இந்திய சூழலின் உருவகத்தோடு வெளிப்படுத்துகிறது. சிவப்பு நிறம் வாழ்வையும், Purple நிறம் பக்தி மற்றும் திருச்சபையையும், வெண்மை நிறம் தூய்மை மற்றும் கடவுளுடன் உள்ள பிரிக்க முடியாத தெய்வீக நட்புறவையும் காட்டுகிறது.

சிலுவையை சுற்றியுள்ள வட்டத்தில் ***'அவர்கள் அனைவரும் ஒன்றாயிருப் பார்களாக'*** என்ற வாசகம், திருச்சபைக்காகவும், உலக மக்களுக்காகவும் இயேசு கிறிஸ்து பிதாவிடம் மன்றாடிய பிரதான ஆசாரியத்துவ ஜெபத்திலிருந்து (**யோவான் 17 : 21**) எடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் தலைவர்

கிறிஸ்து என்பதையும்; திருச்சபையின் ஐக்கியத்தையும், இந்திய நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையும் இந்த வாசகம் வலியுறுத்துகிறது.

அன்பானவர்களே! சுயநலனுக்காக திருச்சபையை பிரித்து சீர்குலைத் தவர்களே அநேகர். ஆனால் திருச்சபைகள் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற முயற்சியில் முதன் முதலில் உருவான ஐக்கியமே தென்னிந்தியத் திருச்சபை. இயேசு கிறிஸ்து தமது மன்றாட்டில் ஒருமைப்பாட்டிற்காக பிதாவிடம் மன்றாடினார். இன்று பதவி, வேலை, புகழ், பெருமை என தங்கள் சுய ஆதாயத்துக்காக திருச்சபையில் குழப்பங்கள், பிரச்சனைகள், மற்றும் பிரிவினைகளை ஏற்படுத்துவோர் அநேகர். நான் இந்த அணியை சார்ந்தவன் என பெருமிதம் கொள்வோர் ஆயிரம்! ஆயிரம் உண்டு. ஏழைகளை ஒடுக்கி, லஞ்சம் வாங்கி, பொய்சொல்லி மக்களை ஏமாற்றி கொள்ளையடிக்கிற கிறிஸ்தவ மக்கள் பெருகிவிட்டனர். நற்செய்தி பணிக்கு செலவிடுவதைக் காட்டிலும் திருச்சபையின் தேர்தலுக்காக செலவிடும் அரசியல்வாதிகள் திருச்சபையில் மலிந்துவிட்டனர்.

இந்த பிரிவினைகள் இந்தியாவில் மட்டும்தான் என்று நினைத்தால், அயல்நாட்டில் வாழும் தென்னிந்திய திருச்சபை உறுப்பினர்களாகிய நமக்குள்ளேயும் வளர்ந்து வருவது மிகவும் வேதனைக்குரியது. இந்நிலையை மாற்றி ஒருமைப்பாட்டை உருவாக்கி, உலகிற்கு சாட்சியாக வாழ்வோம்.

***Complied By** Nesamony.*

## முந்தின நற்குணத்தை பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமம்

நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக.....உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாய் இருக்கிறது. நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்(ரூத்:3:10). இந்த ஆசீர்வாதமான வார்த்தைகள் மிகுந்த ஆஸ்திகாரனான போவாஸ் ரூத்திடம் கூறிய வார்த்தைகள்.

**ரூத்தின் முந்தின நற்குணம்:**

மரித்து போயிருந்த தேவமகிமையற்ற சூழ்நிலை. தேவனிடம் உறவு இல்லாத

நிலைமை. உலகப்பிரகாரமாயும் ஆவிக்குரியபிரகாரமாயும் ஒன்றுமில்லாத வெறுமையான சூழ்நிலையில் இந்த ரூத் காணப்பட்டாள். ஆனாலும் இந்த ஏழ்மையிலும், தேவனை அறியாத நிலையிலும் அவள் தவறு செய்ய பல சூழல் இருந்த போதிலும் தன்னை கறையின்றி காத்துக்கொண்டாள்(ரூத்:3:10).

முற்காலத்தில் நாமும் கூட ரூத்தை போல அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாய் இருந்தோம். ஆனாலும் உலகம் போற்றும் நற்கிரியைகளை செய்கிறவர்களாய் இருந்ததிருக்கலாம். வேதம் சொல்லுகிறது அக்காலத்தில் நாமும் புறஜாதிகளும் விருத்தசேதனமில்லாதவர்களும் கிறிஸ்துவை சேராதவர்களும் இஸ்ரவேலுடைய காணியாட்சிக்கு யூதாவிலுள்ள பெத்லகேமிலிருந்து மோவாப் தேசத்துக்குப் போன எலிமலேக்கு நகோமியின் மருமகள் ரூத். மோவாப் தேசத்தில் எலிமலேக்கும் அவன் இரண்டு குமாரரும் இறந்து போனார்கள்(ரூத்:1:1-5) வாழ்வதற்கு நம்பிக்கையற்ற ஒரு சூழலில் மோவாபிய பெண்ணாகிய ரூத்தும் மாமியார் நகோமியும், சகோதரி ஒர்பாளும் ஆண் துணையின்றி தனித்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ரூத் உடைக்கப்பட்ட பாத்திரமாய் மிகவும் மனம் உடைந்து போய் வாழுவதற்கு வழியில்லாமல் திகைத்திருந்த தருணம். இந்த சூழலில் மாமியார் நகோமி மீண்டும் பெத்லேகேம் செல்ல முடிவெடுத்து தன் இரண்டு மருமக்களையும் அழைத்து நீங்கள் இருவரும் உங்கள் தாய் வீட்டிற்கு திரும்பி போங்கள் என்று கூறுகிறாள். இது ரூத்தின் உலகப்பிரகாரமான சூழ்நிலை. ஆவிக்குரிய பிரகாரமாய் நாம் பார்க்கும் போது ரூத் ஒரு புறஜாதி பெண், பாவத்தினால் புறம்பானவர்களும் வாக்குத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியர்களும் நம்பிக்கை இல்லாதவர்களும் இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாய் இருந்தோம் (எபேசியர்:2:2-12)

## <u>ரூத்தின் பிந்தின நற்குணம்:</u>

இப்படி உடைக்கப்பட்ட பத்திரமாய் இருந்த ரூத் எப்படி ஆசீர்வாதமான பாத்திரமாய் மாறினாள் என்றும்இ ரூத்தின் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமமாய் இருந்ததற்கான காரணத்தை நாம் வேதத்தின் வாயிலாக ஆராயலாம்.

## <u>ஜீவ வழியை தெரிந்து கொண்டாள்:</u>

மோவாபிய பெண்ணாகிய ரூத் தன் பழைய பாவ வழிகளை விட்டு விட்டு தேவனுக்கு நேராக திரும்பினாள். ரூத் கைவிடப்பட்ட சூழ்நிலையிலும் நகோமி கொடுத்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை, ஒர்பாளின் மாதிரியையும் பின்பற்றவில்லை. அவைகள் தனக்கு இந்த உலகத்தின்

சந்தோஷத்தை மாத்திரம் தரமுடியும், அதற்கு மேலாக தனக்கு நியமிக்கப்பட்ட வாழ்க்கையில் தேவனுக்கு ஒரு திட்டம் இருக்கவேண்டும் என்று விசுவாசத்தால் அறிந்து கொண்டாள். எனவே நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்ற ஜீவனுள்ள தேவனை அடைக்கலமாக பற்றி கொண்டு அந்த வழியிலே தொடர்ந்தாள்.[ ரூத் 1: 6 – 17]. ஒருவேளை நகோமியின் ஆலோசனைப்படி தன் தகப்பன் வீட்டிற்க்கு சென்றிருந்தால் உலகப்பிரகாரமான செழிப்பையும் கணவனையும் உடனடியாக பெற்றிருக்கலாம். வேதம் கூறுகிறது மனிதனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் (நீதிமொழிகள்:14:12). ரூத்தின் முன்பாக இடுக்கமான வாசல், வழி விசாலமுமான வாசல் இருந்தது. ஆனால் ரூத் உலகத்தையும் உலகத்தின் வழிகளையும் தாய் வீடாகிய பாவத்தையும் விக்கிரகத்தையும் விட்டு விட்டு ஜீவனுள்ள தேவனையும் தேவனுடைய ஜனத்தையும் தேவனுடைய பிரசன்னம் துதி நிறைந்த தேசமாகிய யூதாவிலுள்ள பெத்லகேமையும் தெரிந்து கொண்டாள். அதாவது இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசித்து ஜீவனை தெரிந்து கொண்டாள். ரூத்தைப் போல நாமும் அநேக சூழ்நிலைகளில் கைவிடப்பட்டு நம்பிக்கை அற்று காணப்படலாம். எந்த கஷ்டமான சூழ்நிலையிலும் நாம் தேவனை துதித்துக் கொண்டிருக்க பழக வேண்டும். ஏனென்றால் வேதம் சொல்லுகிறது, தேவன் நமக்கு அடைக்கலமும் பலனும் ஆபத்து காலத்தில் அனுகூலமான துணையுமானவர்.[சங் 46:1]. ஆவிக்குரிய பிரகாரமாக நாம் தேவனை விட்டு பின்வாங்கி போயிருந்தாலும் அவருடைய கிருபாசனத்தின் கீழ் அண்டும்போது ரூத்தை போல ஜீவனை பெற்றுக்கொள்ளலாம். ரோமர் 6:23 சொல்லுகிறது, பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். அந்த கிருபை வரத்தின் பாதையை நோக்கி நம் பாதையை திருப்போவோமா? நிச்சயமாக தேவன் உங்களுக்கு ஒரு ஆசீர்வாதமான திட்டத்தை வைத்திருக்கிறார்.

## தேவ தயை கிருபை வேண்டி தாழ்மையோடு காத்திருந்தாள்:

பெத்லேகேம் வந்த ரூத் கஷ்டமான சூழ்நிலையிலும் மாமியாரை குறை கூறி கொண்டிராமல் குடும்பத்தை போஷிக்க சுறுசுறுப்புடன் செயல்படுவதை நாம் காணலாம். தன் மாமியார் நகோமியைப் பார்த்து நான் வயல்வெளிக்குப் போய் யாருடைய கண்களில் தயை கிடைக்குமோ அவர் பிறகே போய் கதிர்களை பொறுக்கிகொண்டு வருகிறேன் என்றாள்(ரூத்:2:1-3). அவள்

போவாஸின் வயலில் அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதை பொறுக்கிக் கொண்டாள். போவாஸ் ரூத்தைப் பற்றி கேள்விப்பட்டு அவளை ஆசீர்வதித்தான். அப்பொழுது அவள் “என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்க வேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயில்லை, என்று தயை வேண்டி தன்னை தாழ்த்துகிறதை நாம் காணலாம்(ரூத்:2:11-13). தன்னை தாழ்த்தின ரூத்திற்கு போவாஸ் கண்களில் தயவு கிடைத்தது. போவாஸ் அவளுக்கு தண்ணீர், ஆகாரம், பாதுகாவல் (ஒருவரும் அவளை தொடாதபடி) கொடுத்து அரிக்கட்டுகள் நடுவே அவள் கதிர் பொறுக்கிக் கொள்ளவும் அவளுக்காக அரிகளில் சிலதை சிந்த விடவும் வேலைக்காரருக்கு கட்டளையிட்டு கூடையையும் நிரப்புகிறான். ரூத் போவாஸ் வயலில் கோதுமை வாற்கோதுமை அறுப்பு நாள் வரை தங்கியிருந்தாள். ரூத்தின் சோதனைக் காலம் கோதுமை அறுப்பு காலம் வரை தான்.

போவாஸ் என்றால் மீட்பர் என்று அர்த்தம். ஆவிக்குரிய பிரகாரமாக நாம் சிந்திக்கும் போது போவாஸ் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவையும் ரூத்தை மனம்திரும்பிய ஒரு பாவியாகவும் நாம் சித்தரிக்கலாம். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே நமக்கும் கஷ்டமான நெருக்கடியான சூழ்நிலை ஒரு குறிப்பிட்ட காலம் வரை தான். இந்த நேரங்களில் நாம் தேவனையும் பிற மனிதர்களையும் குறை கூறாமல் தேவனிடம் அடைக்கலமாய் வந்து அவருடைய கிருபை, தயையை பெற்றுக்கொள்ள தாழ்மையோடு காத்திருக்கும் போது எவ்வித நெருக்கடியான சூழ்நிலையிலும் தேவன் நம்மை உலகப் பிரகாரமாகவும் மட்டுமல்ல ஆவிக்குரிய பிரகாரமாகவும் வேத வசனங்களால் போஷிக்கவும், பராமரிக்கவும், சாத்தான் நம்மை தொடாதபடி பாதுகாக்கவும், நம் நெருக்கடியை மாற்றி உயர்த்தவும் வல்லவராயிருக்கிறார். நம்முடைய முற்காலம் எப்படி இருந்தது என்று பாராமல் நம்முடைய தாழ்மையை கண்ணோக்குகிறார். பிரியமானவர்களே வேதம் கூறுகிறது தமக்கு பயந்து தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்களுடைய ஆத்துமாக்களை மரணத்துக்கு விலக்கி விடுவிக்கவும் பஞ்சத்திலே அவர்களை உயிரோடே காக்கவும் கர்த்தருடைய கண் அவர்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது. [சங் 33:18, 19]. இதை நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய்.

**தொடரும்…………**

## *Birthday Celebrants*

### *in September*




| | | |
|---|---|---|
| 04.09.2017 | Mr. S. Celin Jose | 557905909 |
| 08.09.2017 | Ms. Divyadharshini Rajavel | 504491769 |
| 09.09.2017 | Ms. Abighail Davidraj | 508328013 |
| | Mr. Vinith J. Samuel | 056 547 3323 |
| 10.09.2017 | Mrs. Muneeswari | 056 641 1363 |
| 11.09.2017 | Master. Kevin Shalom | 505736697 |
| | Ms. Jemima Ashni | 050 586 8173 |
| 17.09.2017 | Mr. Nelson Sobitha Raj | 556028865 |
| 21.09.2017 | Master. Jesvin Bose | 502334421 |
| 27.09.2017 | Ms. Pragathi | 056 641 1363 |

## *Wedding Anniversaries in September 2017*

| | | |
|---|---|---|
| 7.09.2017 | Mr. Suresh Rajan<br>Mrs. Anitha Rajan | 050 586 8173 |
| 16.09.2017 | Mr. D.Rajavel<br>Mrs. Jein Arpurthakani Rajavel | 050 449 1769<br>055 9591 769 |

“கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்.
இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார். அவர் ஆரோன்
குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்.” சங் .115 :12

**இந்த மாதத்தில் பிறந்த நாளையும் திருமண நிறைவு நாளையும் காணும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் அன்பின் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறோம்.**

WORSHIP TIMIGS - September 2017
MAIN WORSHIPHALL
OASIS HOSPITAL COMPOUND Al Ain

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| Fifth Friday | 7:00PM | Praise & Worship |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |

REGULAR MINISTRIES
Personage - Al Jahili

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Fridays | 07.00 PM | Gospel Ministry ( Camp visit) |
| Third Saturdays | 07.30 PM | Women's Prayer |

# *DAILY BIBLE READING – September - 2017*

***கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்.1:2)***

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Thu | 1 Corinthians 6 | 1 Samuel 25 |
| 2 | Fri | 1 Corinthians 7 | 1 Samuel 26 |
| 3 | Sat | 1 Corinthians 8 | 1 Samuel 27 |
| 4 | Sun | 1 Corinthians 9 | 1 Samuel 28 |
| 5 | Mon | 1 Corinthians 10 | 1 Samuel 29 - 30 |
| 6 | Tue | 1 Corinthians 11 | 1 Samuel 31 |
| 7 | Wed | 1 Corinthians 12 | 2 Samuel 1 |
| 8 | Thu | 1 Corinthians 13 | 2 Samuel 2 |
| 9 | Fri | 1 Corinthians 14 | 2 Samuel 3 |
| 10 | Sat | 1 Corinthians 15 | 2 Samuel 4 - 5 |
| 11 | Sun | 1 Corinthians 16 | 2 Samuel 6 |
| 12 | Mon | 2 Corinthians 1 | 2 Samuel 7 |
| 13 | Tue | 2 Corinthians 2 | 2 Samuel 8 - 9 |
| 14 | Wed | 2 Corinthians 3 | 2 Samuel 10 |
| 15 | Thu | 2 Corinthians 4 | 2 Samuel 11 |
| 16 | Fri | 2 Corinthians 5 | 2 Samuel 12 |
| 17 | Sat | 2 Corinthians 6 | 2 Samuel 13 |
| 18 | Sun | 2 Corinthians 7 | 2 Samuel 14 |
| 19 | Mon | 2 Corinthians 8 | 2 Samuel 15 |
| 20 | Tue | 2 Corinthians 9 | 2 Samuel 16 |
| 21 | Wed | 2 Corinthians 10 | 2 Samuel 17 |
| 22 | Thu | 2 Corinthians 11 | 2 Samuel 18 |
| 23 | Fri | 2 Corinthians 12 | 2 Samuel 19 |
| 24 | Sat | 2 Corinthians 13 | 2 Samuel 20 |
| 25 | Sun | Galatians 1 | 2 Samuel 21 |
| 26 | Mon | Galatians 2 | 2 Samuel 22 |
| 27 | Tue | Galatians 3 | 2 Samuel 23 |
| 28 | Wed | Galatians 4 | 2 Samuel 24 |
| 29 | Thu | Galatians 5 | 1 Kings 1 |
| 30 | Fri | Galatians 6 | 1 Kings 2 |

# ஜெபிப்போம்!!!!



- ஆயர் திருச்சபைக்காரியக்குழு திருச்சபை உறுப்பினர்களுக்காக
- இந்தியாவிலும் ஐக்கிய அரபுக் குடியரசிலும் நம்மை ஆளும் தலைவர்கட்க்காக
- நமது தென் இந்திய திருச்சபைக்காகவும் தென் இந்திய திருச்சபையின் பிரதம பேராயர் மற்றும் அனைத்து பேராயர்கள் ஆயர்கள் ஊழியர்கள் போன்றோருக்காக
- நம் திருச்சபையின் இதர ஊழியங்களுக்காக
- இவ்வருடத்தில் நடைபெறும் எல்லா விஷேச ஆராதனைகளையும் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்திட
- நம் திருச்சபையின் அங்கத்தினர் அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதிக்கவும் ஆண்டவரால் பத்திரமாக பாதுகாக்கப்படவும்
- விசாவுக்காக வேலைக்காக ஊதியத்திற்காக காத்திருக்கும் மக்களுக்கு ஆண்டவர் சரியான நேரத்தில் அவைகளை வழங்கும் படியாக
- தனிமையாய் இந்த தேசத்திலிருக்கும் நம் திருச்சபையின் உறுப்பினர்களுக்காகவும் குறிப்பாக தங்கள் பெற்றோர் மனைவி பிள்ளைகளை விட்டு கேம்ப்களில் தங்கியிருக்கும் நம் அன்பு சகோதரர்களுக்காகவும் அவர்களின் பெற்றோர் மனைவி பிள்ளைகள் சகோதர சகோதரிகள் அனைவருக்காகவும்
- இந்திய தேசத்திலலிருக்கும் நமது பெற்றோர் மற்றும் நமக்குரியவர்கள் அனைவருக்காகவும்
- நமது திருச்சபை தாங்கும் நமது மிஷனரிகட்காக அவர்களது குடும்பத்தினர்கட்காக மற்றும் அவர்கள் ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்திட
- ஜெபிப்போம்.